**பேராதனை பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு

மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகத்தை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக

திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 99 ஆவது பந்தி பிரகாரம் நிறுவனமொன்றில் பற்றாகுறை அல்லது மிகையினை இனங்காணும் போது அனைத்து வருமானங்களும் செலவுகளும் நிதி செயலாற்றல் கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், நியமத்தின் 48 ஆம் பந்தியின் பிரகாரம் நியமத்தின் மூலம் அனுமதி அளிக்கப்பட்டால் அல்லாது வருமானம் செலவினம் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படாத முடியாத போதிலும் பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக ஆரம்பிக்கப் பட்டிருந்த 257 நிதியங்களில் ரூபா 853,275,503 தொகையான மொத்த வருமானத்தில் ரூபா 833,317,158 ஆன செலவினம் ஈடுசெய்யப்பட்டு நிதி செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 84 ஆராய்ச்சி நிதியங்கள் மற்றும் 154 ஏனைய நிதியங்களுக்குரிய வருமானம், பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் 2019 ஆம் ஆண்டு முதல் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய 19 கணக்குகளுக்குரிய நிதிய வழங்லகல் வெளிநிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இவை பல்கலைக்கழகத்தின் வருமானமாக கருத முடியாது | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால் பொருண்மையான முன்னைய காலப்பகுதியின் போது இடம்பெற்றிருந்த சம்பவங்கள் பின்னோக்கி சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், பேராதனை பல்கலைக்கழகத்திற்கு முன்னைய ஆண்டுகளில் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த ரூபா 4,688,998,047 தொகையான சொத்துக்கள் ஆண்டொன்றிற்கு 10 சதவீதம் காலக்கழிவுக்காக புதிய கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், பின்னோக்கி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படும் இறுதிக் கணக்குகளில் 2018 ஆம் ஆண்டில் ஒப்பிடக்கூடிய பெறுமதி மீண்டும் வெளியிடுவதன் மூலம் பின்னோக்கி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 07 இலக்கத்தின் 65 ஆம் பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 692,530,391 ஆன நடைமுறையல்லாத சொத்துக்கள் (நூலகப் புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள்) முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நூலகங்களில் மீள்மதிப்பீடு நடவடிக்கைகள் செய்யப்பட்டு வருவதுடன் அதன் பிரகாரம் உரிய மீள்மதிப்பீடு செயற்பாடு முடிவடைந்தவுடன் அப்பெறுமதி கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 12,499,290 ஆன காலக்கழிவு பெறுமதியை பொது ஒதுக்கத்திற்கு சீராக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படும் இறுதிக் கணக்குகளில் 2018 ஆம் ஆண்டில் ஒப்பிடக்கூடிய பெறுமதி மீண்டும் வெளியிடுவதன் மூலம் பின்னோக்கி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்கான வருமானம் இனங்காணப்பட்டு நிதிச்செயலாற்றல் கூற்றில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் மூலதன செயற்திட்டங்களுக்காக கிடைத்த நிதி ஏற்பாடு தொகையை விஞ்சி செலவிடுவதன் காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 14 செலவிடப்படாத மூலதன மானியக் கணக்குகளில் (Unspent Capital Grant). ரூபா 395,314,856 ஆன வரவு மீதிகள் காண்பிக்கப்பட்டிருந்தன. | இது உள்ளக பண மாற்றீடு இருப்பதுடன் அதற்காக 374 ஆவது குழு மற்றும் நிர்வாக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இதற்கான கொடுப்பனவு செயற் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்த பெறுமதியை மிகைத்து கொடுப்பனவு செய்யப்படவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் பாதீட்டு எல்லையினுள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முன்னைய ஆண்டிற்குரிய பணிக்கொடை குறை ஒதுக்கீடு ரூபா 84,103,157 ஆக இருந்த போதிலும் அது ரூபா 83,585,810 எனக் கணக்கீடு செய்த காரணத்தினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 517,347 குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. . | கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 517,347 முன்னைய ஆண்டிலேயே (2017) பணிக் கொடை கொடுப்பனவிற்காக உருவாகியிருந்ததால் அத் தொகை நடைமுறைப் பொறுப்பின் கீழ் சுட்க் காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடப்பாண்டின் பற்றாக்குறைக்கு எவ்வித தாக்கமும் ஏற்படவில்லை. | ஆண்டிற்கான வருமானம் இனங்காணப்பட்டு நிதிச்செயலாற்றல் கூற்றில் சீராக்கம் செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | 05 பீடங்களுக்குரிய 11 பல்வேறு வகையான இருப்பு உருப்படிகள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2018 ஆம் ஆண்டின் போது இருப்பு கணிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட இந்த 11 உருப்படிகள் 2019 ஆம் ஆண்டின் போர்து மதிபபிடப்பட்டு சொத்துக்கள் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சகல உருப்படிகளும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | திவிநெகும திணைக்களத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள 04 காணித் துண்டுகள் மூலம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 6,590,000 தொகை மற்றும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய குத்தகை தொகை மற்றும் தண்டப்பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | திவிநெகும திணைக்களத்தின் குத்தகை காலம் 2017 ஆம் அடிப்படையில் முடிவடைந்தது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கு குத்தகை பணம் அல்லது தண்டப்பணம் கணக்கிடுவதற்கு இயலுமையொன்று காணப்படவில்லை. இதுவரை அக்கட்டிட வளவில் அரைப் பங்கிற்கு மேல் பல்கலைக் கழகத்திற்கு கையளிக்கப் பட்டிருந்தது. எஞ்சிய கட்டிங்களையும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பல்கலைக்கழகத்திற்கு சட்டரீதியாக கிடைக்க வேண்டிய பணத்தை விரைவில் அறவிடு வதற்கு அல்லது சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |
| (ஊ) | பல்கலைக்கழகத்தினால் 03 வருடங்களை நடாத்திச் செல்லும் 73 ஏக்கர் மற்றும் 53.4 பேர்ச் அளவிலான காணி முறைப்படி பல்கலைக் கழகத்திற்கு கையேற்கப்பட்டு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | தற்போது பல்கலைக்கழகத்திற்கு கையேற்பதற்கு மருத்துவ பீடத்தின் (17 ஏக்கர்) காணியும் மஹாஇலுப்பள்ளம காணியில் (35 ஏக்கர்) மாத்திரம் ஆகும். காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆதலால் பல்கலைக் கழகத்திற்கு சட்டரீதியான உரித்தினை உறுதிப்படுத்த | பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளை பேணிச்செல்லல் மற்றும் பல்கலைகக்ழகத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்படும் இக்காணியை விரைவில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

முடியாத காணிகளை நிலையான சொத்துக்களில் காண்பிக்கப்பட வேண்டியுள்ளதால் கணக்கீடு செய்யப்படவில்லை

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக்குழுக்கள் அல்லது அறிக்கை.**

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் | | | | | |
| DMS Electronic (Pvt) Ltd | 7,748,627 | 21,147,816 | 13,399,189 | பல்கலைக்கழகத்தினால் கடன் கடன் கொடுத்தோராக கருதப்படும் பொருட்களோ சேவைகள் பல்கலைக் கழகத்தின் பேரில் வழங்கப்பட்டதன் பின்னர் அப்பொருட்கள் Good Acceptance Committee ஆல் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னராகும். | உரிய கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் கணக்காண்டு இறுதியில் அதற்கு உரிய இணக்கக் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| Advance Micro Technology (Pvt) Ltd | 1,325,199 | 1,125,299 | 199,900 | | |
| Dinapala (Pvt) Ltd | 294,906 | 8,900 | 286,006 | | |
| Mahanuwara Agencis | 32,500 | 7,088 | 25,412 | | |
| IMS Holdings | 1,196,500 | 1,318,500 | 122,000 | | |
| Hemsons International (Pvt) Ltd | 109,500 | 3,189,384 | 3,079,884 | | |

**1.5.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் PED/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் குறிப்பிடப்படும் நல்லாட்சிக்கான கையேட்டின் 8.2.2 மற்றும் 1971 இன் 38 | மிகை பணம் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் முதலீடு செய்யப்பட்டு அந்த முதலீடுகளுக்காக திறைசேரி | காணப்படும் சட்டங்கள், விதிகளுக்கு இணங்க |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவவுடன் இணங்காத வகையில் பல்கலைக்கழகத்தினால் மீளாயவாண்டில் ரூபா 263,740,682 தொகை நிலையான சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 101(இ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் மொத்த கிரய மதிப்பீடு ரூபா 1,026 மில்லியனான மருத்துவ பீடத்தின் பட்டப்பின் மருத்துவ பீட பாடசாலை நிர்மாணத்திற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 330 மில்லியன் நிதிஏற்பர்டுகளில் ரூபா 285 மில்லியன் தொகை அங்கீகாரமின்றி மீண்டெழும் வேலைகளுக்காக மாற்றப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட ரூபா 285 மில்லியன் தொகை நிதிக் குழுவினதும் கட்டுப்பாட்டுச் சபையினதும் அங்கீகாரத்திற்குட்பட்டு 2016 திசெம்பர் 2016 திசெம்பர் மாதம் மீண்டிடெழும் செலவினத்திற்கு மாற்றப் பட்டதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் எதிர்காலத்தில் இச்செயற்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இத்தொகையை மீண்டும் மாற்றும் நோக்கில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | காணப்படும் சட்டங்கள், விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | உயர் கல்வி நடவடிக்கைகளுக்காக திறைசேரி மூலம் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 238,417,183 பெறுமதியான நிதிஏற்பாடு சுகாதார அமைச்சிற்குரிய கண்டி, குருணாகல் மற்றும் பேராதனை ஆகிய வைத்தியசாலைகளின் அபிவிருத்தி நவடிக்கைகளுக்காக பல்கலைக்கழகத்தினால் நோக்கத்திற்கு முரணாகவும் முறையான அங்கீகாரமின்றியும் பயன்படுத்தப்பட்டிருந்தன. | உரிய அமைச்சுடன் கலந்துரையாடி தேவையான சீராக்கங்கள் செய்யபடும் | வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

**1.5.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| விடயம் | | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 07 நடைமுறைக் கணக்குகளுக் குரிய கொடுக்கல் வாங்கல்கள் | 18,196,804 | காசேடு, வங்கி இணக்கம், வங்கிக் கூற்று மீதிக உறுதிப்படுத்தல்கள் | காசேடு, வங்கி இணக்கம், வங்கிக் கூற்று மீதிக உறுதிப்படுத்தல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன . | நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வின் போது துரிதமாக உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆதன வாடகை வருமானம் | 12,062,824 | உடன்படிக்கை, வாடகை ஆதன விபரங்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு | இதுவரையில் தேவையான சகல உடன்படிக்கைகள் மற்றும் ஆவணங்கள் மற்றும் பொது நிர்வாக பிரிவில் கோவைப்படுத்தப்பட்டு உளள்து. கணக்காய்விற்காக தேவையான சந்தர்ப்பத்தில் வழங்குவதற்கு இயலுமை உள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | குறித்த உடன்படிக்கை நாளது வரையாக்கப்பட்டு வருமானம் சரியாக அறவிடப்பட்டு பதிவேடுகள் உறுதிப்படுத்து வதற்காக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெவ்வேறு நபர்களிடமிருந்தும் 44 நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்க வேண்டிய ரூபா 1,517,369 தொகை 01 ஆண்டு முதல் முதல் 14 ஆண்டுகள் காலம் கடந்திருந்த போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இதுவரை குறித்த தரப்பினர் களிடமிருந்து ரூபா 69,910 ஆன நீர் கட்டணங்கள் அறவிடப் பட்டுள்ளன. 2007 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 400,000 ஆன மீதி கிடைக்க வேண்டிய மீதி இழப்பீடொன்றாக குறிப்பிடப்படுகின்றது. குறித்த பணத்தை காப்புறுதி கம்பனியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களின் கடன் மீதிகளை அறவிடுவதற்கும் மற்றையவர்களின் கடன் மீதிகளை சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வருடாந்த கணக்காய்வு அறிக்கைகளில் அவதானிப்பிற்கு உட்பட்ட பல்கலைக்கழகத்தின் 09 பீடங்களுக்குரிய மாணவர்களிட | பல்கலைக்கழகத்திற்குள் கற்றலில் ஈடுபட்டுள்ள மாணவர்களிட மிருந்து அறவிடப்பட வேண்டிய விடுதிக் கட்டணங்கள் பாடநெறிக் | கிடைக்க வேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மிருந்து அறவிடப்பட வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் ரூபா 1,735,950 மற்றும் ரூபா 5,320,542 ஆன தண்டப்பணம் 01 ஆண்டு முதல் முதல் 37 ஆண்டுகள் காலம் கடந்திருந்த போதும் அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டணங்கள் மற்றும் தண்டப்பணம் அவர்களின் பட்டப்படிப்பினை நிறைவு செய்து உரிய சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் போது அறவிடும் முறைமையின் கீழ் அறவீடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. முன்னைய ஆண்டு களுக்குரிய கிடைக்க வேண்டிய கட்டணங்கள் மற்றும் தண்டப்பணம் தொடர்பாக நியமிக்கப்பட்ட மூன்று பேரைக்கொண்ட குழவின் ஆலொசணையின் பிரகாரம் குறித்த பீடங்களினால் வழங்கப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அப்பரிந்துரையின் பேரில் எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வெளிநாட்டு புலமை பரிசில் நிதியத்திலிருந்து கொள்வனவு செய்வதற்காக 2017 ஆம் அண்டின் போது மருத்துவ பீடத்தின் சுழற்சி நிதியம் (Medical Faculty Revolving Fund) இற்கு மாற்றப்பட்டிருந்த போதும் ரூபா 15,439,993 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் கிடைக்க வேண்டிய மீதியாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் வெளிநாட்டு மாணவர் வருமானத்தில் இருந்து அப்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைக்க வேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர்களுக்கு 5 வகைகளின் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன் மீதிகளில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,221,437 ஆன கடன்தொகை இடமாற்றம் மற்றும் சம்பளம் இடை நிறுத்தம் காரணமாக அறவீடுகள் நிறுத்தப்பட்டிருந்தன. | 2019 சனவரி / பெப்ரவரி மாதம் முதல் அக்டகன் தவணை அறவீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அறவிட முடியாத கடன் தொகையை எதிர்காலத்தில் அவர்களால் செலுத்த வேண்டிய கடன் தவணை அளவில் பேரில் விகித சமமாக அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் தற்போது தீர்மானித்துள்ளது உத்தியோகத்தர் மரணித்தல், வேலை இடை நிறுத்தம் மற்றும் கேட்டு விலகல் போன்ற காரணங்களால் அறவிட முடியாத போன ரூபா 251,830 தொகை தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கிடைக்க வேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றுள்ள கல்விசார் பதவியணியினரின் விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகத்துடன் கைச்சாதிட்ட உடன்படிக்கைகள் மீறப்பட்ட காரணத்தால் 2018 திசெம்பர் 31 திகதியில் 110 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 142,596,921 தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது. இதில் 92 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 121,078,386 தொகையை அறவிடும் போக்கு குறைந்த மட்டத்தில் உள்ளது. | 110 விரிவுரையாளர்களில் 73 விரிவுரையாளர்கள் மிகவும் பழைய உடன்படிக்கைகளை மீறிய விரிவுரையாளர்களாக இருந்ததுடன் அவர்கள் தொடர்பாக நிர்வாக குழவின் பரிந்துரையின் பேரில் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். பிணைப் பெறுமதி சேமலாப நிதியத்திலிருந்து அறவிட முடியுமான 18 விரிவுரையாளர்களும் ஏனைய விரிவுரையாளர் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | குறித்த விரிவுரையாளர்கள் தொடர்பாக துரிதமாக நடவடிக்கை எடுத்து அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 396 | சுற்றறிக்கைக்கு இணங்காமல் ரூபா 2,307,389 பெறுமதியான 79 காசோலைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் நிதிப்பிரமாணம் 396 இல் குறிப்பிட்டதன் படி எதிர்காலத்தில் மீண்டும் கொடுப்பனவு செய்ய நேர்ந்தால் கொடுப்பனவு செய்யக்கூடிய வகையில் வேறு பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. | உரிய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 1646 | விவசாய பீடத்தின் 05 வாகனங்கள் நாளாந்த ஓட்ட குறிப்புக்கள் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் இத்தகவல்கள் உரிய நேரத்திற்கு வழங்குவதற்கு பண்ணை முகாமையாளரால் இணங்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் பீஈடீ/12 இலக்கம் மற்றும் 2003 ஜுன் 02 திகதிய சுற்றறிக்கையின் 9.10 பிரிவு | பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படும் விசேட துறைக்குரியதல்லாத 296 | வகிக்கும் பதவிகளுக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் பதவிகள் காணப்படல், ஆட்சேர்ப்பு நடை | உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது இல்லாமலாக்க் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வெற்றிடங்களை இயலுமான வரை நிரப்புவதற்கோ அல்லது இல்லாமலாக்க 2019 மார்ச் மாதம் வரை நடவடிக்கை எடுக்கப்படாமல் வெற்றிடங்களாக தொடர்ந்தும் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | முறை இல்லாமல் பதவிகள் காணப்படல், ஆட்சேர்ப்பு நடை இல்லாமை, சம்பள படிமுறைகள் காணப்படாமை, பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழுவினாலும் அமைச்சினாலும் நிரப்ப வேண்டிய பதவிகள் காணப்படல் போன்ற காரணங்களினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினரை நாளாந்தம் வேறுபடுகின்றது. எனினும் ஆட்சேர்ப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆணைக்குழவின் அங்கீகரிக்கப்பட்ட கல்வி பதவியணியினரின் ஒழுக்கம் மற்றும் கல்விப் பொறுப்பு தொடர்பான வழிகாட்டல் கோவையின் 5 ஆம் பிரிவு | பொறியியல் மற்றும் மருத்துவ பீடங்களில் 12 விரிவுரையாளர்களின் பிள்ளைகள் அப்பீடங்களில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. எனினும் அந்நிலைமையை வெளிப்படுத்துவதற்கு அல்லது இதன் மூலம் தரக் கட்டுப்பாட்டிற்கு ஏற்படக்கூடிய பாதகமான நிலைமைகளை தவிர்ப்பது தொடர்பாக எவ்வித வேலைத் திட்டமொன்று இந்த இரண்டு பீடங்கள் மூலம் இனங்காணப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அந்நிலைமையை வெளிப்படுத்துவதற்கு முறையொன்று இல்லாமல் இருப்பதுடன் எதிர்காலத்தில் நடைமுறையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறித்த வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2008 பெப்பரவரி 01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் முதலாவது பகுதி | பல்கலைக்கழக விஞ்ஞான கூடங்களில் பாவனையின் பின் ஒதுக்கப்படும் இரசாயன பொருட்கள் மற்றும் துரப்பிடிக்காத பொருட்கள் பல்கலைக்கழக வளவில் தயாரிக்கப்பட்டுள்ள குழியொன்றிற்கு எறியப்பட்டிருந்தன. மேலும், பல்கலைக்கழக 3 விடுதிகளின் மலசலகூட தொகுதிகள் செயற்படாமை காரணமாக முறையற்ற விதத்தில் சூழலிற்கு விடப்பட்டிருந்தது. | இரசாயன கழிவுப் பொருட்கள் வெளியேற்றுவதற்காக Insee Ecocyle நிறவனத்துடன் உடனபடிக்கை கைச்சாததிடப்பட்டிருந்த துடன் மல அகற்றல் முறைமையை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கழிவுப் பொருட்கள் வெளியேற்றல் மற்றும் புகை தொடர்பாக காணப்படும் சட்டங்கள் விதிகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தி அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 665,251,029 ஆன பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 668,666,112 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,415,083 ஆன அதிகரிப்பபொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசின் மீண்டெழும் செலவின மானியம் அதிகரித்தமை, பழைய சொத்துக்களின் விற்பனை வருமானம் அதிகரித்தமை, வெளிநாட்டு மாணவர் வருமானம் அதிகரித்தமை மற்றும் தொடர் மற்றும் தொலைக்கல்வி கேந்திரத்தின் இணைந்த செயற்பாடுகள் வருமான அதிகரிப்பிற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் மிகையாக இருந்ததுடன் ஏனைய ஆண்டுகளில் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. அவ்வாறே ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை செம்மையாக்குகையில் 2014 ஆம் ஆண்டில் ரூபா 3,254,372,377 ஆன பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 5,117,805,369 ஆக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கின் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை கருத்திற்கொள்ளக்கூடிய தாக்கமொன்று இடம்பெறவில்லையெனினும் அரசின் மீண்டெழும் செலவின மானியம், வெளிநாட்டு மாணவர் வருமானம், பழைய சொத்துக்களின் விற்பனை மூலம் உழைத்த வருமானம் இணைந்த செயற்பாடுகள் மூலம் உழைத்த வருமானம் 23 சதவீதம் முதல் 633 வரை அதிகரித்திருந்ததுடன் பல்கலைக்கழகததின் சர்வதேச அளவில் அபிவிருத்தி செய்வதற்காக கிடைத்த மானியம், மனித வள அபிவிருத்திக்காக கிடைத்த மானியம் பதிவுக் கட்டண வருமானம் பரீட்சைக்கட்டண வருமானம் மற்றம் கால்நடைகளிலிருந்தான நட்டம் 38 சதவீத்திலிருந்து 260 சதவீதம் வரை வீச்சில் குறைவடைந்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டில் 1:2.2 ஆக காணப்பட்ட நடைமுறைச் சொத்து விகிதம் மீளாய்வாண்டில் 1:1.8 என வீழ்ச்சியடைந்திருந்ததுடன் விரைவுச் சொத்து விகிதம் 1:1.4 ஆக இருந்தது. அதன் பிரகாரம் இவ்விகிதம் படிப்படியாக குறைவடைந்து பல்கலைக்கழகத்தின் நடைமுறைச் பொறுப்புக்களை தீர்க்கும் ஆற்றல் ஆபத்துடன் காணப்படல் அல்லது நடைமுறைப் பொறுப்பினை தீர்ப்பதற்கு நீண்டகாலம் எடுத்தல் போன்ற காரணங்களாக இருக்கும் என அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 மார்ச் 26 ஆந் திகதிய 06/2014 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சுற்றறிக்கை சகல பிரிவுத் தலைவர்களுக்காக ஆரம்ப சம்பளத்தில் 8 சதவீதமான தொகையொன்று உபசரிப்பு படிகளாக செலுத்தப்பட்ட போதிலும் அதற்கு இணங்காத வகையில் சிவில் பொறியியலாளர்கள் துறையின் பிரிவுத் தலைவருக்கு ரூபா 27,490 தொகை 2018 ஆம் ஆண்டில் 06 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மாதந்த கூட்டங்களுக்காக சமூகமளிப்போருக்கு உபசரிப்பு செலவினங்களுக்காக இத் தொகை மீளளிக்கப பட்டுள்ளது. எதிர்காலத்தில் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்த பிரிவுத் தலைவர்கள் அறிவித்துள்ளதாக தெரிவித்துக்கொள்கின்றேன் | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் XIII ஆம் அத்தியாயத்தின் 101(ஆ) உப பிரிவிற்கு இணங்காத வகையில் உடல் கல்வி பிரிவு துறையினால் 04 சந்தர்ப்பங்களில் வெளித்தரப்பினரால் செலுத்தப்பட்ட ரூபா 22,500 தொகை நிறுவன நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் முறையற்ற வகையில் ஊழியரால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | இச்சந்தர்ப்பத்தில் விளையாட்டரங்கில் சேவை புரியம் ஒன்பது (09) ஊழியர்களிடமிருந்து ஒருவரிடம் ரூபா 2,500 வீதம் (இரண்டு தவணைகளில்) நிறுவனத்திற்கு சம்பளத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்ததாக தெரிவித்துக் கொள்கின்றேன். | உரிய சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மருத்துவ பீடத்தின் பட்டப்பின் மருத்துவ பீட பாடசாலை நிர்மாணத்திற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 330 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு அதில் ரூபா 39,703,080 மதியுரையாளர் | செயற்திட்டத்திற்குரிய செயற்பாடு தொடர்பாக தீர்மானித்தல் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டிருந்ததுடன் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் அமைச்சரவை | முறையான மதிப்பீட்டின் பின்னர் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு இணங்க செயற்பட |

| | | |
|---|---|---|
| கம்பனிக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் இதுவரை நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தீர்மானத்தின் பிரகாரம் பல சந்தர்ப்பங்களில் செயற திட்டத்திற்குரிய ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டதுடன் இறுதியாக 2014 திசெம்பர் 24 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அப்போதைய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்புகளுக்கு கவனம் செலுத்தி மீண்டும் தயாரிக்கப்பட்ட செயற்திட்ட மதிப்பீடுகள் குறிப்புக்களை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக உயர் கல்வி அமைச்சிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பிரிவிற்கு இணங்காமை காரணமாக பல்கலைக்கழகத்திற்கு மீளாய்வாண்டில் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் கடன் தவணைகள் அறவீடு செய்யப்படாதிருந்ததுடன் ரூபா 1,841,805 ஆன கடன் தவணை மற்றும் குறித்த வட்டித்தொகை 01 மாதம் முதல் 14 மாதங்கள் வரை அடவிடப்படாமல் காணப்பட்டது. | 2018 ஆம் ஆண்டின் போது பொதியளவு மீண்டெழும் செலவினத்திற்காக பொது திறைசேரியிடமிருந்து பணம் கிடைத்தமையால் கையேற்புக்கள் தாமதமாகின. ஆதலால் கடன் கையேற்கும் வரை கடன் தவணையை அறவிடுவதற்கு முடியாமையால் இந்நிலைமை உருவாகியிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த அனைத்து கடன்களையும் கையேற்று 2019 சனவரி / பெப்ரவரி மாதம் முதல் கடன் தவணை அறவீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது கையேற்றல் படிப்படியாக மேற்கொள்ளப் படுவதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | தொடர்ச்சியாக கடன் தவணை அறவிடுவதற்கு முறையான நடைமுறை அறிமுகப்படுத்த வேண்டும். |
| (ஆ) | 1976 மார்ச் 09 ஆந் திகதிய 61 ஆம் இலக்கம் மற்றும் 1976 திசெம்பர் 07 ஆந் திகதிய 70 ஆம் இலக்க | இலங்கை பல்கலைக்கழகம் நிதிச் சுற்றிக்கை இலக்கம் 70 இன் பிரகாரம் ஏப்ரல் திசெம்பர் | கடன் தவணை தொடர்ச்சியாக |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கை அவ்வாண்டிற்கு மாத்திரம் வழங்கப்பட்ட உள்ளக சுற்றறிக்கையின் அடிப்படையில் பல்கலைக்கழகம் மீளாய்வாண்டு வரை ஊழியர் கடன், இடர் கடன், மோட்டார் சைக்கில் கடன், வாகனக் கடன் மற்றும் கணனிக் கடன் என்பவற்றிற்காக ஏப்ரல் திசெம்பர் மாதங்களில் உரிய கடன் தவணைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மாதங்களில் ஊழியர் கடன், இடர் கடன், மோட்டார் சைக்கில் கடன், வாகனக் கடன் மற்றும் கணனிக் கடன் என்பவற்றிற்காக கடன் தவணையை அறவிடுவதை இடை நிறுத்துவதுடன் வட்டி மாத்திரம் அறவிடப்படுகின்றது. எவ்வாறாயினும் அம்மாதங்களுக்கு வட்டி அறவிடப்படுவதால் பல்கலைக்கழகத்திற்கு நிதிசார் நட்டம் ஏற்படவில்லை. | அறவிடப்பட வேண்டும். |
| (இ) | மாணவர் செய்முறை பயிற்சிக்காகவும் வாகன திருத்த வேலைகளுக்காகவும் பொறியியல் பீடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பிரிவு 2017 அம் ஆண்டின் போது அதன் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு அது மீண்டும் ஸ்தாபிக்கப்படாமையால் மாணவர்களின் செய்முறை பயிற்சிகளுக்கும் வாகன பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும் தடையொன்றாக இருந்ததது, | மற்றும் வாகன பராமரிப்பு பிரிவொன்றை மீண்டும் ஸ்தாபிப்பதற்கான செயற்திட்ட அறிக்கை அங்கீகாரத்திற்காக நிர்வாக சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | மாணவர் செய்முறை பயிற்சி தேவைப் பாட்டிற்கும் பல்கலைக் கழகத்தின் வாகன அளவின் அடிப்படையிலும் உரிய உபகரணங்கள் மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்கள் பயிற்சி பெற்ற ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக இப்பிரிவின் துரிதமாக ஸ்தாபிக்கப்பட வேண்டும். |

**3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18(2) (ஈ),உப பிரிவு 18 மற்றும் 29 ஆம் பிரிவிற்கு இணங்காத வகையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் 2016/2017 கல்வியாண்டு வரை பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக 1064 மாணவர்களை பதிவுசெய்து 04 பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் நடாத்திச் செல்லப்பட்டு வந்தன. | பொறியியல் பீடத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற சில பாட நெறிகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் அநேகமான பாட நெறிகளுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. தற்போது பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக உரிய சட்ட விதிகள் திருத்தம் செய்யப்பட்டு வருவதுடன் SLQF வழிகாட்டல்களுடன் இணைந்ததாக காணப்படுகின்றன. அனைத்து திருத்தங்களின் பின்னர் சகல பாடநெறிகளுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் | உரிய சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆணைக்குழு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2015 திசெம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் பட்டதாரி கல்வி பாடநெறி மீளாய்வு தொடர்பான கைநூலின் 7 ஆவது தீர்மான தேர்வு முறைகளுக்கு அமைய பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடங்களினதும் மாணவர் மதிப்பீட்டுச் செயற்பாடு தொடர்பாக திட்டவட்டமான நடைமுறையொன்றும் நியமம் ஒன்றையும் தயாரித்து பல்கலைக்கழக கட்டுப்பாட்டு சபையினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் | திட்ட வட்டமான நியமப்படுத்தப்பட்ட நடைமுறை யொன்று (Standered Operating Procedures) அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக தயாரிக்கப்பட்டு வருகின்றது. | பரீட்சை நடைமுறையில் வெளிப்படைத் தன்மையை பாதுகாப்ப தற்காக நடைமுறை யொன்று பயன்படுத்த விசேட கவனம் செலுத்தப்பட்டு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் செயற்படுத்தப்படும் கால்நடை பாதுகாப்பு சபையின் வழிகாட்டலின் பிரகாரம் விரிவுரை நடாத்தும் நேர அட்டவணை தயாரிப்பதற்கு பொறியியல் பீடம் மற்றும் மருத்துவ பீடங்கள் 02 நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உரிய வழிகாட்டல்களுக்கு இணங்குவதற்காக வேறு முறையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொறியில் பீடம் வேலையை அளவிடும் முறைமையொன்றை (Work Calculator) தயாரிப்பதற்காக குழுவொன்று பெயரிட்டப்பட்டது. மருத்துவ பீடத்தில் கற்றல் நடவடிக்கை 03 பிரிவுகளின் கீழ் நடாத்தப்படுகின்றன. அது விரிவுரையாக, சிகிச்சை பயிற்சி (Clinical Training)என செய்முறை பயிற்சி (Practical Training) என நடாத்திச் செல்லப்படுகின்றன. | உரிய வழிகாட்டலின் பிரகாரம் ஏற்பாடுகளின் பிரகாரம் தரமான சேவையொன்றை வழங்குவதற்காக தேவையன நடவடிக்கை துரிதமாக மேற் கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2009/2010 கல்வியாண்டு முதல் 2012/2013 கல்வியாண்டு ஆண்டு வரை 4 கல்வியாண்டுகளுக்காக விவசாய பீடத்திற்காக 224 மாணவர்கள் பதிவு செய்யப்படா திருந்ததுடன் அது பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் 20 சதமாக இருந்தது. | பாடநெறிகளுக்காக மாணவர்களை தெரிவு செய்யும் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறையின் தன்மை இந்நிலைமைக்கு காரணமாக இருந்தது. | பல்கலைக்கழக நுழைவிற்கு தகுதி பெறும் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கு வாய்ப்பு கிடைக்கும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால் பல்கலைக்கழக முறைமையில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்க கூடிய மாணவர்களின் இயலுமையை உச்ச |

| | | | |
|---|---|---|---|
| | | | அளவில் பயன்படுத்த வேண்டும். |
| (உ) | 1980 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 35 ஆண்டு காலப்பகுதியில் விவசாய தொழில்நுட்ப மற்றம் முகாமைத்துவ துறைக்காக விவிசாய பீடத்தில் மாணவர்களின் அதிகரிப்பு சதவீதம் 17.5 மட்டதில் காணப்பட்டதுடன் பௌதீக மாணவ வளங்களுக்குரிய மற்றும் விவசாயதுறைக்காக காணப்படும் கேள்விக்கு ஒப்பாக மாணவர் எண்ணிக்கை அதிகரித்தல் தொடர்பாக முகாமையின் கவனம் செலுத்தப் பட்டிருக்கவில்லை. | எமது நோக்கம் சமூககத்திற்க பொறுப்பொன்றல்லாத தரத்துடனான பட்டதாரிகளை உருவாக்குதல் ஆகும். அதன் பிரகாரம் பாடநெறிகளை நாளது வரையாக்குதல் மற்றும் எமது stake holder கருத்தின் பிரகாரம் கூடுதலாக தரத்தை அதிகரித்தல் மேற்கொள்ளப் பட்டுள்ளது. தற்போது பீடத்திற்கு ஆட்சேர்க்கப்படும் எண்ணிக்கையை அதிகரித்துள்ளதுடன் பீடத்தில் காணப்படும் பட்டப் படிப்பு பாடநெறிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளன. | பௌதீக மாணவ வளங்களுக்குரிய மற்றும் விவசாயதுறைக்காக காணப்படும் கேள்விக்கு ஒப்பாக மாணவர் எண்ணிக்கை அதிகரித்தல் தொடர்பாக முகாமையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3.4 நிதிய குறைப்பயன்பாடு**

-----------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 49,704,134 தொகையும் மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 10,000,000 என மொத்தம் ரூபா 59,704,104 தொகையான 14 நிர்மாணச் செயற்திட்டங்களுக்கான பணம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இச்செயற்திடடங்களில் 03 செயற்திட்டங்கள் வேலை ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் மேலும் 05 செயற்திட்டங்களின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப் பட்டிருக்கவில்லை. மேலும் 04 செயற்திட்டங்களில் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்தால் அக்கணக்கு மீதிகளுக்குரிய சீராக்கங்களை மேற்கொள்வதாக குறித்துக் கொள்ளப்பட்டது. | நிர்மாண செயற் திட்டங்களுக்கு உரியதாக காணப்படும் நிதியம் அந்தந்த ஆண்டுகளில் பயன்படுத்துவதற்கு திட்டம் மற்றும் முறையான மேற்பார்வையொன்று செய்யப்பட வேண்டும். |

**3.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

----------------------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2016 ஒக்தோபர் 17 | கட்டிடங்களில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் | பல்கலைக்கழகத்தின் சொத்துக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | முதல் 2018 பெப்ரவரி 08 திகதி வரையான காலத்தினுள் பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 875,752,824 பெறுமதியான 04 மாணவ விடுதிகள் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படாததனால் 2019 ஏப்ரல் மாதம் வரையும் அவ் விடுதிகளை மாணவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படாமல் இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 5582 மாணவர்களுக்காக தங்குமிட வசதிகள் வழங்க வேண்டியிருந்தன. | பூர்த்தி செய்யப்படாததனால் கட்டிடங்கள் பொறுப்பேற்ற திகதி முதல் அவ்விடுதி களுக்காக தேவையான மலசல கூட முறைமை மற்றும் சிற்றுண்டிச்சாலை அமைப்பதற்கும் தேவையான பொருட்களை வழங்குவதற்கும் தேவையான பதவியணியினரை இணைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | செயற்திறனாக பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகம் ரூபா 82.2 ஆன செலவில் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த கலையரங்கிற்காக ரூபா 6,855,652 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் 04 ஆண்டு காலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்டாமலல் உருக்குலைந்து காணப்பட்டது. | பழைய விஞ்ஞானிகளின் பொறுப்பு நிதிய சபையின் மூலம் இச்செயற்திட்டத்திற்காக நிதி வழங்கல் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிதிஏற்பாடு மானிய அடிப்படையில் 2014.10.24 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் முழுச்செயற்திட்டமும் பூர்த்தி செய்யப்படாமையால் இறுதி செயற்பாட்டிற்காக பயன்படுத்த முடியாத நிலைமையொன்று காணப்பட்டது. | 04 ஆண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்ட இக்கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை திட்டமிடப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.6 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு பல்கலைக்கழகத்தின் 4 கல்விப் பீடங்கள் மற்றும் 03 வெவ்வேறு பிரிவுகளின் மூலம் 12 வெவ்வேறு சேவைகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களுடன் தொடர்ந்தும் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்ட்டிருந்தன. . | இச்சிக்கலான நிலைமை உருவாகியுள்ள சகல சேவை நிலையங்களும் 2019.12.31 ஆந் திகதி நிறுத்தப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டு முதல் அத்தகைய சகல சேவை நிலையங்களுக்காக பெறுகை செயற்பாட்டிற்கு இணங்க வழங்குனர்களை தெரிவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலவும் சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 22 ஏக்கருக்கு மேற்பட்ட காணி கங்கவட்ட கோரளை பிரதேச சபைக்கும், போவலவத்த வஜிராராம சர்வதேச பௌத்த நிலையம் மற்றும் திவிநெகும திணைக்களத்திற்கு குத்தகை அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்த போதும் முறையான குத்தகை அறவிடப்படாமல் அல்லது மீண்டும் உடமையை பல்கலைக்கழகத்திற்கு பொறுப்பேற்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1996 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் பிரதேச சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த பணம் அறவிடப்பட்டுள்ளது. அதன் பிறகு குத்தகையொன்று மேற்கொள்ளப்படவில்லை.<br><br>போவலவத்த வஜிராராம சர்வதேச பௌத்த நிலையம் நடாத்திச் செல்லப்படும் காணி 99 வருட குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் 10 ஆண்டுகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 10 ஆண்டுகளின் பின்னர் குத்தகை அறவீடு தொடர்பாக குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிடப்படாதிருந்த போதிலும் அது தொடர்பாக காணி கட்டிடங்கள் பராமரிப்பு பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>திவிநெகும திணைக்களம் நடாத்திச் செல்லப்படும் காணியின் குத்தகைக்காலம் 2017.12.31 இல் முடிவடைவதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த காணி மற்றும் கட்டிடங்களை பல்கலைக் கழகத்திற்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு திணைக்களம் அறிவிக்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழகத்திற்குச் சட்டரீதியாக பெற வேண்டிய பணத்தை துரிதமாக அறவிடுவதற்கு அல்லது அதற்குரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.8 பதவியணியினர் நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள செயற்திட்ட முகாமையாளர் மற்றும் செயற்திட்ட பொறியிலாளர்களினால் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 3,281,369,421 பெறுமதியான 22 நிர்மாணச் செயற்திட்டங்கள் மேற்பார்வை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 504,549,057 பெறுமதியான முற்பணம் மற்றம் ரூபா 318,158,683 பெறுமதியான (இடைக்கால பட்டியல்கள் (Interring Payment) இந்த ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் சான்றுறுதிப்படுத்தலின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | ஒப்பந்த அடிப்படையில் 03 செயற்திட்ட பொறியிலாளர் பதவிகள் 03 ஆண்டு காலப்பகுதிக்காக மாத்திரம் ஆட்சேர்க்கும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கிடைத்த அங்கீகாரத்தின் பிரகாரம் தற்போதய செயற்திட்ட பொறியியலாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். அதன் பிரகாரம் 2017 செப்தம்பர் மாதத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட செயற்திட்ட பொறியியலாளர்கள் செயற்திட்ட முகாமையாளர்களின் கீழ் மூலதன செயற்திட்டங்களின் பொறியியலாளர் நடவடிக்கை களுக்காக அவதானிப்பு மற்றும் சான்றுறுதிப்படுத்தலை மேற்கொள்கின்றனர். | இத்தகைய பதவிகளில் பொறுப்புக்களின் தன்மையின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் ஆபத்துடனாக இருப்பதால் நிரந்தர நியமனத்திற்காக ஆட்சேர்ப்பு துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பேராதனைப் பல்கலைக்கழகம் 2018 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்களாக உள்ள 516 பதவிகளுக்காக ரூபா 286,295,486 தொகையான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 296 வெற்றிடங்களாக இருந்தமையால் 2018 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழகத்தினால் கல்விசாரா பதவியணியினர் சம்பளம் மற்றும் வேதனங்களுக்காக மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | வெவ்வேறு காரணங்கள் அடிப்டையில் வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு முடியாமல் இருந்ததுடன் அத்தியவசிய தகவல்களுக்காக அவ்வெற்றிடமான பதவிகளில் நிதிஏற்பாடுகளிலிருந்து தற்காலிக அடிப்படையில் பல்கலைக்கழகத்தின் அத்திய சேவைகளை பராமரித்துச் செல்வதற்கு ஆட்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதால் வெற்றிட பதவிகளுக்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்தது. | குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் PED/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10 ஆம் பிரிவிற்கு முரணாகவும் 2018 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைகழகத்தின் வேலைத்திட்ட பாதீட்டின் மூலம் அங்கீகாரம் வழங்கப்படாத 5 | அந்த உததியோகத்தர்கள் பேராதனைப் பல்கலைக்கழகததின் சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தின் கடமைகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். 2011 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் இணங்குதல் வேண்டும். |

பதவிகளுக்குரிய 05 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக 2018 ஆம் ஆண்டின் போது சம்பளம் மற்றும் வேதனங்களாக ரூபா 2,773,215 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையின் 06 பல்கலைக்கழகங்களை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு எடுத்த தீர்மானத்திற்குரிய சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவின் பிரகாரம் அந்நோக்கங்களை செயற்படுத்துவதற்காக பொது திறைசேரி ரூபா 100 மில்லியன் நிதியினை பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்திருந்ததுடன் அதற்காக தேவையான ஊழியர்களின் தேவைப்பாடு குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவிற்கு உயர்கல்வி அமைச்சின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.